**கப்பற்துறை அபிவிருத்தி நிதியம் - 2014**

---

கப்பற்துறை அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

**1.4 நிதியத்தின் நிர்வாகம் மற்றும் நிலைத்திருதன்மை**

---

1973 இன் 26 ஆம் இலக்க இலங்கை கப்பல் இடவசதிகள் ஒதுக்கீட்டு மத்திய பணியக அதிகாரச்சட்டத்தின் கீழ் கப்பல் முகவர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்கள் மற்றும் தரகுப் பணம் என்பவற்றைப் பயன்படுத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு பராமரித்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்டரீதியான நிதியமொன்றாக சட்டரீதியான பின்னணியுடன் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் செயலாளரின் மேற்பார்வை மற்றும் நிர்வாகத்தின் கீழ் நிதியத்தின் நடவடிக்கைகள் பேணிச்செல்லப்பட்டிருந்தது. 2011 மே 24 ஆந் திகதிய பீஈ/சீஓபீ/(4)31ஜீஈஎன் ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் அறிவுறுத்தலின் பேரில் 2011 ஆம் ஆண்டின்போது நிதியத்தில் காணப்பட்ட பணத்திலிருந்து ரூபா 46.47 மில்லியன் புதிய பயணிகள் பிரிவொன்று ஆரம்பிப்பதற்காக முதலீடு செய்வதற்கு வ/ப இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்பட்டதன் பின்னர் நிதியத்தில் காணப்பட்ட எஞ்சிய நிதிசார் சொத்துக்கள் அனைத்தும் தீர்வையாக்கப்பட்டு திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் எவ்வித செயற்பாட்டு நடவடிக்கையொன்றும் இடம்பெறாததால் நிதியத்திற்குரிய வருமானங்கள் உழைப்போ அல்லது செலவின பாய்ச்சலொன்றோ இடம்பெற்றிருக்கவில்லை. ஆதலால் இதுவரை நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பான சிக்கலான நிலைமையொன்று உருவாகியிருந்தது.

**1.5 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

சனாதிபதி செயலகத்திற்கும் கல்வி அமைச்சிற்கும் நிதியத்திலிருந்து முறையே வழங்கப்பட்ட ரூபா 366,691,764 மற்றும் ரூபா 946,095 ஆன நிதி தொடர்பாக எவ்வித ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 55,000,000 தொகையை பொதுத் திறைசேரியால் மீள்நிரப்பல் அடிப்படையில் பெற்றுக்கொண்டதாகவும் அதனை இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பொன்றல்ல எனவும் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சொத்தொன்றாக காண்பிக்கப்படுகின்ற திரட்டிய பெறுமதியான ரூபா 422,637,859 இற்காக மீதி உறுதிப்படுத்தல் கிடைக்காமை மற்றும் உரிய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக காண்பிக்காததன் அடிப்படையில் பண அறவீடு நிச்சயமற்ற நிலைமையில் இருப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

2011 ஆம் ஆண்டு முதல் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்காக வருமானச் செலவினக் கூற்றொன்றோ அல்லது திரண்ட நிதியத்தின் மாற்றங்கள் தொடர்பான கூற்றொன்றோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2011 ஆம் ஆண்டின் போது பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையொன்றின் பேரில் கடன்பட்டோர் தவிர ஏனைய சகல சொத்துக்களும் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் பின்னர் நிதியத்தின் சகல செயற்பாட்டு நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் செயற்பாடற்றுக் காணப்பட்ட நிதியத்திற்குரிய தரப்பினரிடமிருந்து உரிய அறிவுறுத்தல்களின் பேரில் கலைப்பதற்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது பொது முயற்சிகள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் தொகை 2010 ஆம் ஆண்டின் போது மீண்டும் திறைசேரியால் தீர்க்கப்பட்டிருந்ததுடன் அக்கடன் தொகைக்காக பெறவேண்டியிருந்த ரூபா 37.09 மில்லியன் வட்டி மீளாய்வாண்டின் போது கணக்கீட்டு வழுவொன்றாக கருதி திரட்டு நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஏனைய அரச நிறுவனமொன்றினால் பயன்படுத்தப்பட்ட நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 94,598 பெறுமதியான நிலையான சொத்துக்கள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.